
# 6.பாப்புவா நியூ கினி





129 கோடி மக்கள் வாழும் இந்தியாவில் பேசப்படும் மொழிகள் 122. ஆனால் வெறும் 71 இலட்சம் மக்கள் வாழும் பாப்புவா நியூ கினி என்ற நாட்டில் 848 மொழிகள் பேசப்படுகின்றன. அந்த அளவுக்கு இனக்குழுக்களும் உள்ளன. 45,000 ஆண்டுகளுக்கு முன்பே மனிதக்குடியேற்றம் தோன்றிய பழம்பெரும் நாடு இது.

தேசியக் கொடியும் சின்னமும்

இன்னும் கண்டறியப்படாத கலாச்சார, புவியியல், தாவரவியல், விலங்கியல் விந்தைகள் மிகுந்த இந்நாட்டின் மக்களில் 40% பேர்கள் வெளியுலகத்தொடர்பின்றி 'நமக்கு நாமே' என்று இயற்கையின் அரவணைப்பில் வாழ்கின்றனர். தூரக்கிழக்கு நாடுகளில் ஒன்றான பாப்புவா நியூ கினி மக்களில் 18% பேர்கள் மட்டுமே நகரங்களில் உள்ளனர். கி.மு 7,000 ஆண்டளவிலேயே இங்கு வேளாண்மை உத்திகள் உருவாக்கப்பட்டுள்ளன. தென் கிழக்கு ஆசியாவில் தோன்றிய வாழை முதன் முதலாக பாப்புவா நியூ கினியில்தான் பயிரிடப்பட்டது.



தமிழ்நாட்டைவிட பரப்பளவில் 3.5 மடங்கு பெரிய இந்நாடு(பரப்பு:4,62,840 ச.கி.மீ) ஆஸ்திரேலியாவிற்கு வடக்கே 160 கி.மீ தொலைவில் உள்ளது. சிங்கப்பூரிலிருந்து 6 மணிநேர விமானப்பயணத்தில் இங்கு செல்லலாம். இந்நாட்டின் மேற்கு அரைவாசி இந்தோனேசியாவின் ஆளுகைக்குட்பட்ட பாப்புவா மற்றும் இரியன் ஜயா மாகாணங்களையும், மீதி நியூ கினித்தீவின் கிழக்கு அரைவாசியையும் மற்றும் பல 600 தீவுகளையும் கொண்டது. இந்நாட்டின் மிகச்சிறிய எண்ணிக்கையிலுள்ள நகரங்களிலொன்றான போர்ட் மோர்ஸ்பி இதன் தலைநகர். பெரும்பாலான மக்கள் பின்பற்றும் சமயம் கிறித்துவம். ஆங்கிலம், பாப்புவா நியூ கினி சைகை மொழி, டோக்பிசின், ஹிரி மோட்டு ஆகிய 4 மொழிகள் அரசின் அதிகாரப்பூர்வ மொழிகளாகும். பழங்குடி மக்களைத்தவிர சீனர்கள், ஆஸ்திரேலியர், ஐரோப்பியர், பிலிப்பினோ ஆகியோரும் இங்கு குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் வாழ்கின்றனர். இந்தோனேசியா, சீனா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்து வந்துள்ள ஆயிரக்கணக்கான அகதிகளையும் இந்நாடு அரவணைத்து வாழவைத்துக்கொண்டிருக்கிறது.



## அகதிகள் முகாம்

கி.பி 1545 இல் இங்கு வந்த யூரிகோ ஆர்டிஸ் டே ரெட்டிஸ் என்ற ஸ்பானிஷ்காரர், ஆப்பிரிக்காவின் கினியா கடற்கரையில் தாம் பார்த்த அதே மக்களைப் போல இவர்களும் காணப்பட்டதால் இப்பகுதியை நியூ கினியா என்று அழைத்தார். மலாய் மொழியில் பாப்புவா என்றால் ஒரு வகையான

சுருட்டை முடியையுடையவர்கள் என்ற பொருள். இங்கு மிகுதியாக வாழ்பவர்கள் பாப்புவர்கள் ஆவர். பாப்புவா நியூ கினியா என்ற பெயர் ஏற்பட்டது இதனால் தான். 1910 இல் இங்குள்ள கோவரிபாரித்தீவில் பாபுவா வளைகுடாவில் 10,000 மண்டை ஓடுகளைத் தாம் கண்டறிந்ததாக ஹாரி டவுன்சி என்ற மதபோதகர் குறிப்பிட்டுள்ளார். ஆம் இங்கு தலைவேட்டையாடலும், மனித இறைச்சி உண்ணலும் 1950 வரைகூட நடைமுறையில் இருந்தவையே. இப்போது கடுமையான சட்டத்தால் இவை ஒழிக்கப்பட்டுள்ளன. கிறித்துவ மிஷினரிகள் நடத்தும் 500 பள்ளிகளும், 6 பல்கலைக்கழகங்களும் இங்கு அறிவொளி பரப்பி வந்தாலும் இன்னும் கல்வியறிவுடையோர் 58% ஆக மட்டுமே உள்ளனர்.

19ஆம் நூற்றாண்டில் நாட்டின் வடபகுதியை ஜெர்மானியர்கள் கைப்பற்றி ஜெர்மன் நியூகினி என்றும், தெற்குப்பகுதியை ஆங்கிலேயர் கைப்பற்றி பிரிட்டிஷ் நியூகினி என்றும் பெயரிட்டனர். முதல் உலகப்போரில் ஆஸ்திரேலியப்படைகளால் ஜெர்மன் பகுதி கைப்பற்றப்பட்டு, தனி ஆட்சிப்பகுதியாக ஆஸ்திரேலியாவாலும், பிரிட்டனாலும் நிர்வகிக்கப்பட்டு வந்தது. இங்குதான் இரண்டாம் உலகப்போரில் ஜப்பானியப்படை படுதோல்வி அடைந்தது. அப்போது இங்கு நடந்த கடும்போரில் ஜப்பானியர்கள், ஆஸ்திரேலியர், அமெரிக்கர் உட்பட 2,16,000 பேர்கள் கொல்லப்பட்டு இந்நாடு இரத்தவெள்ளத்தில் மூழ்கியது. இரண்டாம் உலகப்போருக்குப்பின் நாட்டின் இருபகுதிகள் ஒன்றிணைக்கப்பட்டு பாபுவா நியூகினி என்றானது. உள்ளூர் மக்கள் ஐ.நாவுக்கு தம் நாட்டை ஆஸ்திரேலியரிடமிருந்து விடுவிக்க வேண்டி வேண்டுகோள் விடுக்க, கத்தியின்றி, இரத்தமின்றி, யுத்தமின்றி, 16.09.1975 இல் நாடு விடுதலையடைந்தது.



பீட்டர் ஓ நெயில்

இன்று இந்நாட்டின் முடிக்குரிய அரசியாக இரண்டாம் எலிசபெத் மகாராணியும்,



அவரின் பிரதிநிதியாக, தலைமை ஆளுநர் மைக்கிள் ஓஜியோவும் , பிரதம மந்திரியாக பீட்டர் ஓ நெயிலும் உள்ளனர்.. அரசி அலங்கார கௌரவ தலைவியே ! நாட்டின் அதிகாரப்பூர்வமான தலைமை பிரதமரிடமே உள்ளது. 31 பேர்கொண்ட நாடாளுமன்றம் உள்ள இந்நாடு 22 பகுதியாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதில் போகன்வில்லா தீவும்,தலைநகர் போர்ட் மோர்ஸ்பி உள்ள இடமும் தன்னாட்சி பெற்ற பகுதிகளாகும்.

தலைநகரிலுள்ள நாடாளுமன்றம்

பாலியல் வன்முறை மிகுந்த நாடுகளில் இது முன்னணி வகிக்கிறது. 2013 கணக்கின்படி போகன்வில்லா தீவில் 41% ஆண்கள் மனைவியில்லா வேறொரு பெண்ணைப் பாலியல் வன்முறை செய்துள்ளனர். 14.1% ஆண்கள் இதில் கூட்டாக ஈடுபட்டுள்ளனர் என்பதும் பாதிக்கப்பட்ட பெண்களில் பாதிபேர் 15 வயதுக்கு உட்பட்டோர் என்பதும் அதிர்ச்சிக்குரியது. பசிபிக் பகுதியில் அதிக எய்ட்ஸ் நோயாளிகள் இவர்களே என்பதும் குறிப்பிடத்தக்கது.



## பொங்கும் எரிமலை

இயங்கும் எரிமலைகள் உள்ள இந்நாட்டில் அவை அடிக்கடி பொங்குகின்றன. நில அதிர்வும், சுனாமியும் அடிக்கடி விஸ்வரூபம் எடுக்கும். புவி நடுக்கோட்டிற்கு அருகே இருந்தும், பெரும்பாலும் வெப்பமான நாடாயினும் சற்று மலைப்பாங்கான இடங்களில் பனிப்பொழிவுகளும் காணப்படும். அமேசானுக்கு அடுத்தபடி மிகுதியான மழைக்காடுகள் இங்குதான் உள்ளன. 67% இடம் காடுதான். பலதரப்பட்ட புவியியல் அமைப்புடைய இந்நாட்டில் முதுகெலும்பு போன்ற


கரடு முரடான நில அமைப்பு

மலைகளும், மழைக்காடுகளும் குறுகிய இடங்களும் போக்குவரத்தை முறையாக அமைக்கத் தடையாக உள்ளன. நடந்தோ, விமானத்திலோ மட்டுமே செல்லக்கூடிய இடங்கள் பல உள்ளன. தொடர்வண்டி போக்குவரத்து இங்கு இன்னும் சாத்தியமாகவில்லை. பறவை ஆர்வலர்களுக்கு இந்நாடு ஒரு சொர்க்க பூமியாகும். 781 வகை பறவைகளும், 190 பாலாட்டிகளும், 160 வகை தவளைகளும், 110 வகை பாம்புகளும் இங்கு காணப்படுகன்றன. ஆஸ்திரேலியாவில் உள்ள பறவை, விலங்கினங்களோடு இவை ஒத்துள்ளன. ஹீடெட் பிட்டோகி என்ற விஷப்பறவையுடைய ஒரே நாடு இதுவே. மரம் ஏறும் கங்காரு இங்கு தனிச்சிறப்புடையது.




முக்கிய நிகழ்வுகளில் விலை மதிப்புள்ள பொருள்களும், பன்றிகளும் விருந்தினர்களுக்கு வழங்கப்படுகின்றன. இருவேறு பழங்குடியினர் பிரிவினரிடையே நடக்கும் சண்டை நிலம், பன்றி, பெண் இவற்றின் காரணமாகவே நிகழ்கிறது.

வைத்திருக்கும் பன்றியின் அளவைக்கொண்டே சொத்து மதிப்பிடப்படுகிறது. 1933 வரை கிளிஞ்சல்கள் தேசிய நாணயமாகப் பயன்படுத்தப்பட்டன இப்போதுள்ள நாணயமான ஒரு கினோ- 2.01 அமெரிக்க டாலருக்கு இணையானது. 'டிப்ஸ்' தரும் பழக்கும் இந்நாட்டில் அறவே இல்லை.நல்ல பணிக்கு ஊக்கமாக, சன்மானம் தர விரும்பினால், அது குடும்ப உறுப்பினர்களிடையே பிரச்சினையை ஏற்படுத்தும் என்பதால் அதனை இரகசியமாகவே தரவேண்டும்.



பழங்குடியின்ர குடியிருப்பு

பாப்புவா நியூ கினி நாட்டில் இறந்தவர்களின் சடலத்தை அடக்கம் செய்யாமல் வழிபட்டு வரும் பழக்கம் பழங்குடியினரிடையே உள்ளது. பப்புவா நியூ கினியாவில் உள்ள மோரோப் தீவில் கருகிய பிணங்களை மம்மி போல் தொங்க விடுவது அங்கு வரும் சுற்றுலா பயணிகளை அச்சுறுத்துகிறது. இங்கு இறக்கும் ஆண்கள் மற்றும் பெண்களின் உடல்களை வெட்டி மூங்கில் கம்பில் கருவாடு போல் தொங்கவிடுவர். அந்தச் சடலங்களில் இருந்து கொழுப்புகளை எடுத்து



பாதுகாக்கப்படும் இறந்த உடல்கள்

தங்களது உறவினர்களின் தோல்களிலும், முடிகளிலும் தடவிக் கொள்வர். மேலும், சதை அழுகாமல் இருக்கவும், உடம்பிற்குள் காற்று போகாமல் தடுக்கவும் காது, கண், வாய், மூக்கு என அனைத்தையும் மூடிவிடுகின்றனர். இவ்வாறு செய்வதன் மூலம் இறந்தவர்களின் சக்தி தங்களுக்கு வருவதாக அப்பகுதியில் உள்ள கிராம மக்கள்

நம்புகின்றனர். இது கிராம மக்களிடையே 200 வருடங்களாக நடந்து வரும் பாரம்பரியமாகும். மேலும் இந்த பிணங்களை விழாக்களின் போதும், சிறப்பு நாட்களிலும் எடுத்து வந்து அலங்காரம் செய்து வழிபட்டு வருகின்றனர்.

இயற்கை இந்நாட்டிற்கு வாரி வழங்கியுள்ள தங்கம், செம்பு, வெள்ளி, பெட்ரோலியம், இயற்கை வாயு, மரம், மீன் ஆகியன இங்கிருந்து ஏற்றுமதியாகியும் இந்நாட்டினரின் தனிநபர் வருவாய் 2268.20 டாலராகவே உள்ளது.(இந்தியா: $1581.50) 2003 இல் மட்டும் 70,000 கிலோ தங்கம், 73,000 கிலோ வெள்ளி, 2,004,000 மெட்ரிக் டன் செம்பு ஆகியன தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. இங்கு சுரங்கங்களில் முதலீடு செய்துள்ள ஆஸ்திரேலியா(K1,446 மில்லியன்), பிரிட்டன்(K160 மில்லியன்), அமெரிக்கா(K 91 மில்லியன்) ஆகிய நாடுகள் பெரும் ஆதாயம் ஈட்டி வருகின்றன.

சுரங்கத்தொழில் பணியிலுள்ளோர் , கணக்காளர்கள், ஆசிரியர்கள், மருத்துவர்கள், மென்பொருள் பொறியாளர்கள், சமயப்போதகர்கள் என்று ஏறத்தாழ 2500 இந்தியர்கள் பாப்புவா நியூகினியாவில் பணிபுரிகின்றனர். இவர்களில் ஏறத்தாழ 500 பேர்கள் தமிழர்கள். பாப்புவா நியூ கினி இந்தியர் சங்கம் அறப்பணிகள், வளர்ச்சிப்பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

பாப்புவா நியூ கினி பற்றி கேள்விப்பட்ட தமிழர்கள் மிகக் குறைவு. பாப்புவா மக்களும் தமிழர்களைப் பற்றி அறிந்திருக்க மாட்டார்கள். தமிழகத்திற்கும், பபுவா நியூ கினிக்கும் நடுவில் எட்டாயிரம் கிலோ மீட்டர் தூரம்! இத்தனை தொலைவில் வாழும் பழங்குடி மக்களின் மொழியில் ஆயிரக்கணக்கான தமிழ்ச் சொற்கள் புழங்கி வருகின்றன.

பல இடங்களின் பெயர்கள், நபர்களின் பெயர்கள் தமிழ் போன்று ஒலிக்கின்றன. எடுத்துக்காட்டிற்கு: வா (Wau), கரிமுகம் (Karimui), பூ (Pua), இரவி (Erave), லிங்கம், நாகம்- இப்படி இன்னும் பல. ஒரு மலைக்குப் பெயர் "காவேரி ஹில்ஸ்". அங்கே நிலம் இன்றைக்கும் "பூமி" என்றே அழைக்கப் படுகின்றது.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரையில், பாப்புவா நியூ கினியா பற்றி வெளியுலகிற்குத் தெரியாமல் இருந்தது. ஆங்கிலேய, டச்சு காலனியாதிக்கவாதிகள் அந்தப் பிரதேசத்தை "கண்டுபிடித்த" போது, புராதன கால மனித சமுதாயம் இருப்பதைக் கண்டறிந்தார்கள். காலனிய ஆட்சி காரணமாக, பெரும்பான்மையான பாப்புவா மக்கள் கிறிஸ்தவர்களாக மாறி விட்டார்கள். அதனால், கிறிஸ்தவப் பெயரைச் சூட்டிக் கொண்டாலும், குடும்பப் பெயராக

பாப்புவா மொழிப் பெயர் ஒன்றை வைத்துக் கொள்கின்றனர். அவையும் தமிழ் போன்றே ஒலிக்கின்றன. எடுத்துக்காட்டு: Kuala (குள்ளன்), Muliah (மூலை), Koleala (கோழிக் காரன்)... இன்றைய பாப்புவா நாடாளுமன்றம் அமைந்திருக்கும் இடத்தின் பெயர் Waigani (வாய்க் காரன்) இங்கு பூர்வீக இடப் பெயர்கள் அப்படியே இருந்தாலும், ஆங்கில மயமாக்கல் காரணமாக சில மாற்றங்களுக்குள்ளாகி இருக்கலாம். டச்சுக் காரர்களின் காலனிய மேலாதிக்கத்திற்கு உட்பட்டிருந்த இந்நாடு, பிற்காலத்தில் இந்தோனேசிய ஆக்கிரமிப்பினால் மேலும் பாதிப்புக்குள்ளாகியது. எழுத்து வடிவம் இல்லாதிருந்த பாப்புவா மக்களின் பூர்வீகம் குறித்து அறிந்து கொள்வது கடினம். ஆயினும், அவர்கள் ஏதோ ஒரு வகையில் தமிழர்களுடன் தொடர்புடையவர்கள் என்பதை, மொழிகளுக்கு இடையிலான ஒற்றுமை எடுத்துக் காட்டுகின்றது. தமிழர்களின் பூர்வீகம் பாப்புவா நியூ கினியாகவும் இருக்கலாம் எனக் கருதுவோர் உளர்.

*(வெற்றி வேந்தன்:ஜனவரி2016)*